ഉണ്ണിനമ്പൂതിരി

V 11 No 5 My 1929

SL
[illegible]2u,M19BA
M24·11·5
210774

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| தொகுதி 11 | 1929ஆம் மே மாதம் | பகுதி 5 |


### தெய்வ வணக்கம்

நாரதப்ர்மாதி அமரர்களி னொருகர்
நாரணன் முதற் பண்ணவர்
நடுக்கம் பொருந்திய இடுக்கண் களைந்திட
நடக்கும் குழந்தை வயதில்
சூரபத் மாசுரன் கயமுகன் தாருகன்
துன்முகன் பாநுகோபன்
திட்டவஞ் சக்கிரவுஞ் சாசுரன் சிங்கனொடு
சுற்றிய வரக்கரை யெலாம்
கோரசங் காரனை தூளிபட லுங்கொண்டு
கூறிட வுனது வெற்றிக்
கொடியேற இந்த்ரன்மணி முடியேற வானொடு
குடியேற வைத்த துரையே
தாரணியின் மேவுபரி பூரண உலாசனே
ஸரஸகோ பாலன் மருகா
சதுர்மறைக ளோதந்த பருமகுரு வாய்வந்த
சரவண பவா நந்தனே. (சுப்ரமண்யதேசிகர்)

## ஹிதோபதேசம்

(1) சுகமடைய விரும்பினால், கவலையை விட்டு எப்போதும் சந்தோஷமுடையவனாயிரு. ஏனென்றால் சுகம் சந்தோஷத்தினால் ஏற்படுவது. கஷ்டம் துக்கத்தாலுண்டாவது.

(2) உனக்கு சுயாதீனமான காரியத்தை நீ எப்போதும் முயற்சியுடன் செய். பராதீனமான காரியத்தை விட்டுவிடு. பராதீனம் துக்ககரமானது. சுயாதீனம் சுகசாதகமானது.

(3) உனக்குப் பொறுக்கமுடியாத துன்பம் வந்தகாலத்திலும் நீ பிறருக்குத் துரோகஞ் செய்யத் துணியாதே. பெரியோர் அருவருக்கத்தக்க விஷயத்தை வாக்கினாலுங் கூடச் சொல்லாதே. ஒருவன் இன்னொருவனைப் பற்றிச் சொன்ன தீயசொற்களை நீ சொல்லாதே. சொல்ல நேர்ந்தால், குறிப்பாகவேனும் உவமானவாயிலாகவேனும் முதலில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேனும் கூறவேண்டும். அதுவும் சர்வஜாக்கிரதையாய்க் கூறவேண்டும்.

(2) உன்னுடைய சுகத்திற்காக நீ ஜீவஹிம்சை செய்யாதே! "ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிதே" என்று பெரியார் கூறியிருக்கிறார்களல்லவா?

(5) பொருள், பந்துசம்பந்தம், வயது, செய்கை, வித்தை ஆகிய இவைகளில், பொருளைவிடப் பந்துசம்பந்தம் மேலானது. பந்துசம்பந்தத்தைவிட வயது மேலானது. வயதைவிடச் செய்கை மேலானது. செய்கையைவிட வித்தை மேலானது. ஆகையினால் வித்தையைவிட உத்தமமான துணை மனிதனுக்கு வேறில்லை யென்றறியலானோம். வித்தையை எப்பாடுபட்டாயினும் கற்றுக்கொள்ள முயல். வித்தை யென்பது கேவலம் புத்தகப்படிப்பன்று. புத்தகப் படிப்பு மாத்திரம் நன்மையைத் தராது. அது சில சமயம் தீயவழியி



லும் துணிந்துசெல்ல மனதைத் தூண்டும். ஆதலால் வாழ்க்கையில் நல்ல ஆதரவையும் நல்ல நடவடிக்கைகளில் ஊக்கத்தையும் தருவனவெல்லாம் வித்தையாக எடுத்துக்கொள்ளலாம். நல்ல நடவடிக்கையுடைய ஒருவன், சமையல் செய்வதில் வல்லவனாயிருந்தால் அவனை உலகம் இகழாது. நாடக நடிகர்களை இகழ்கிறார்கள் ஜனங்கள். ஏன்? நடிகன் பரதசாஸ்திர வல்லவனாகக் கொள்ளத்தக்கவன் ஆனாலும் பெரும்பான்மையும் நடிகர்களில் காணப்படும் தீயகுணங்களினால் அந்த வித்தையில் வல்லோனொருவன் நல்ல நடவடிக்கையுடையவனாயிருந்தாலும் அது பிரகாசிப்பதில்லை. இருந்தாலும் ஒருசமயமில்லாவிட்டால் ஒருசமயம் அவன் சிறந்த மதிப்பை அடைகிறான். ஆகையினால் ஒருவன் எந்த வித்தையில் வல்லவனாகவிருந்தாலும் நல்ல நடவடிக்கையும் கூடவே இருக்கவேண்டும். இன்றேல் வித்தைக்கு மேன்மை ஏற்படாது.

(6) எது பெண்கல்வி? நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் அவர்களுடைய காவலைக் கடந்து மனம்போனபடி நடக்கத் துணிவையுண்டாக்குவதா? அல்ல. பிற்காலத்தில் குடும்பபாரத்தைப் பிரயாசையின்றி வகிக்கத்தக்க யோக்யதையைத் தரத்தக்கதேயாம். பிற்காலத்தில் அவர்கள் குழந்தைகளுக்குத் தாயாயிருக்குங்காலத்தில், மிகுதியும் உபயோகப்படுவதாய் இருத்தல் வேண்டும். அதுதான் பெண் கலவி.

சுகாதார சம்பந்தமாயும், பாகசாஸ்திர சம்பந்தமாயும் வைத்திய சம்பந்தமாயும் கல்வி ஏற்படுவது அவர்களுக்கு பெரும்பயனைத் தரும்.

---

# அகஸ்திய முனிவர்

அகஸ்திய முனிவர், தவநிதியாக விளங்கிய வருணமுனிவருடைய இச்சையினால் ஒரு குடத்திலே உற்பத்தியாயினார். அதனால் அவர்க்குக் குடமுனியென்றும் கும்பமுனியென்றும் பெயருண்டாயிற்று. பிராமணாசாரப்படி கும்பருக்கு அவர் தந்தை தக்கவயதில் உபநயனஞ் செய்வித்தார். அப்பால் அகஸ்தியமுனிவர் வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் ஓதியுணர்ந்து சிவஞானச் செல்வம் கைவரப் பெற்றார். ஞானச் செல்வங் கைவந்தபின் முனிவர் சகல சித்திகளையும் அளிக்கத்தக்கதான தவஞ்செய்யத் திருவுளங்கொண்டு, திரிலோசனனாகிய சிவபெருமானை நினைத்துத் தவம்புரிந்தார்.

நீண்டகாலம் தவம்புரிந்தபின் சிவபெருமான் அவருக்குப் பிரத்தியக்ஷமானார். அகஸ்தியர், பரமஞான சிகாமணியாதலால், சிவபெருமானுடைய காட்சி கண்டதும் எழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் துதித்தார். சிவபெருமான், “அப்பனே, நீ விரும்புவதென்ன? அதனை யளிக்கவே நாம் வந்தோம்”, என்றார்.

அகஸ்தியர், “அகிலநாயகனே, அடியேன் இந்த உலகவாழ்வை விரும்பவில்லை; ஸ்வர்க்கலோக வாழ்வை விரும்பவில்லை; முத்தியையும் விரும்பவில்லை; தம்



முடைய திருவடித் தொண்டனாயிருந்து என்று மாறாத பக்தி செலுத்தவேண்டும். அடைதற்கரிய அந்தச் செல்வமொன்றே நான் விரும்புவது” என்றார்.

சிவபெருமான் இதைக் கேட்டதும் மனமுவந்து, “அன்ப, நீ விரும்பியவாறே என்றும் என்னிடத்தில் மாறாத பக்தி உனக்கிருக்கும்! நீ என்னுடைய தொண்டர்களிலே சிறந்தவனாக விளங்குவாய்” என்று வரமளித்து மறைந்தார்.

இவ்வாறு வரம்பெற்றபின் அகஸ்திய முனிவர் தம்முடைய தவவன்மையால், கடவுளுடைய சிருஷ்டிக்குட்பட்ட சகல உலகங்களையும் கண்டு மகிழத் திருவுளங்கொண்டு, இந்திரலோகம் முதல் சகல உலகங்களுக்கும் போய்வருகையில் யமனுடைய உலகத்துக்குச் சென்று அங்கே நெடுகெலும் சுற்றிப்பார்த்தார்.

யமலோகத்தில் கொடிய பாபஞ்செய்தவர்களைத் தண்டிக்க நரகம் என்பதொன்றுண்டு. அகஸ்தியர் அதனைச் சுற்றிப் பார்க்கையில் சிலர் அங்கே ஓரிடத்தில் தலைகீழாய்த் தொங்கிக் கதறுவதைக் கண்டார். அவர்களைக் கண்டதும் அவர்களிடம் இரக்கங்கொண்டு “ஐயன்மீர்! நீவிர் இவ்வாறு கதறுவதன் காரணமென்ன?” என்று வினவினார்.

அவர்கள், “அப்பா, எங்கள் குலத்திலே அகஸ்தியன் என்றொருவனிருக்கிறான். அவன் தவம்புரிவதிலே சித்தமுடையவனாயிருக்கிறான். ஒரு பெண்ணை

மணந்து இல்லறநெறியிலிருந்து ஸந்ததியை உண்டாக்கவில்லை. ஸந்ததி அபிவிருத்தி யில்லாமையினால் நாங்கள் இப்படி நரகதுன்பம் அநுபவிக்கிறோம்" என்றார்கள்.

அகஸ்தியர், அவர்களைப் பணிந்து "நீங்கள் துக்கப் படவேண்டாம். இனி உங்கள் துயரம் விரைவில் நீங்கும். நான்தான் அகஸ்தியன்! உங்களுக்குற்ற இந்தத் துன்பம் நீங்க, நீங்கள் இன்னும் எதைச் செய்யக் கட்டளை யிடினும் நான் அவ்வாறே செய்வேன். தன் குலத்தை இன்பநிலையில் வைக்காத பிள்ளை இருந்தென்ன போயென்ன? அவன் தவமும் அவன் ஈட்டும் புண்யமும் எதற்காகும்? அவனுக்கு ஈசுவரனுடைய திருவருட் பிரசாதந்தான் எப்படிக் கிடைக்கும்? இருக்கட்டும். விரைவில் உங்களுடைய இந்தத் துக்கத்தை நீக்க முயல்வேன்!" என்று கூறி அவர்களைப் பணிந்து விடைகொண்டு பூலோகம் வந்து, தாம் மணந்துகொள்ளத் தக்க மங்கை எங்கிருக்கிறாள் என்று ஞானதிருஷ்டியால் உணர்ந்து விதர்ப்ப நாடடைந்தார்.

அந்த நாட்டுவேந்தன் ஒரு யாகம் செய்தான். அந்த யாகத்தில் அவனுக்கு ஒரு புத்திரி தோன்றினாள். அந்தப் பெண்ணுக்கு அவன் லோபாமுத்திரையெனப் பெயரிட்டு மிக அருமையாக வளர்த்துவந்தான். அந்த மாதரசியே தமக்கேற்ற மனைவியெனக் கண்ட அகஸ்தியர் அரசனைக் கண்டு தமது கருத்தைத் தெரிவித்தார்.



அகஸ்தியர் யமலோகத்தைச் சுற்றிப் பார்க்கையில் அங்கே ஓரிடத்தில் தலைகீழாய்த் தொங்கிக் கதறுவோரைக் கண்டார்.

ப. 214

அரசன், "காட்டில் காய்கனி கிழங்குகளைத் தேடியுண்டு தவம்புரிபவராகிய உமக்கு, நான் அருமையாயடைந்த புதல்வியை எப்படிக் கொடுப்பேன்? உம்மிடத்தில் என் புத்திரிக்கு என்ன சுகமிருக்கப்போகிறது? இராஜ ஐசுவரியத்தில் வாழ்ந்த என் பத்திரி, இந்நாள் வரையில் தான் அநுபவித்த சுகங்களை யெல்லாம் மறந்து உம்மிடம் எப்படி வசிப்பாள்? இது பொருத்தமில்லாத மணமாயிருக்கிறபடியால், என் மனம் இதனை உசிதமானதென்று கொள்ளவில்லை" என்றான்.

அகஸ்தியர், "வேந்தே, நீர் கூறுவது நியாயந்தான்! இராஜவாழ்விற்கும் எம்போன்ற முனிவர்களுடைய வாழ்வுக்கும் எவ்வளவோ வித்தியாசங்களுண்டு. எங்கள் வாழ்வைத் தவமதிபடைத்தவரே விரும்புவர். ஆயினும், உன்னுடைய புதல்வியைக் கண்டு, 'அகஸ்தியர் என்கிற ஒரு முனிவர் உன்னை மணந்துகொள்ள விரும்புகிறார். அவரை நீ மணந்துகொள்கிறாயா? மணந்துகொள்ள விரும்பினால் உன்னை நான் அவர்க்கு மணஞ்செய்து கொடுக்கிறேன். இன்றேல் உன் திருவுளத்துக்கு மாறாக நடப்பதில்லை என்று சொல்லும். உமது புதலவி என்னை மணந்துகொள்ள இணங்கினால் மணஞ்செய்து கொடும். இன்றேல் வேண்டாம். கட்டாயம் செய்வதில்லை" என்றார்.

அரசன், அதுகேட்டு "நல்லது அவ்வாறே செய்வோம்" என்று கூறி யெழுந்துபோய்த் தன் புத்திரியை அழைத்து "அகஸ்தியர் என்னும் பெயர்

கொண்ட ஒரு முனிவர் உன்னை மணஞ்செய்து கொள்ள விரும்பி என்னிடம் வந்திருக்கிறார். முனிவர்களின் வாழ்க்கையைப்பற்றி நீ நன்றாயறிவாய். அதுபற்றி நான் உனக்குக் கூறவேண்டுவதில்லை. அவர் உன் சம்மதம் கேட்கிறார். நீ சம்மதித்தாலன்றி மணப்பதில்லை என்றும் கூறுகிறார். உன் விருப்பம் என்ன?" என்று கேட்டான்.

லோபாமுத்திரை, "என் தந்தையே, உமது பொன்னடி வணங்குகிறேன். இந்த நற்செய்தி கேட்ட இந்த நாளை நான் என்றும் மறவேன்! தவமதியிற் சிறந்த பெரியாரொருவரை மணக்கும் பாக்கியம் எனக்கிருப்பது பற்றி நான் மகிழ்கிறேன். நிலையற்ற உலகவாழ்வையும் உலகவாழ்விலே சிறப்படைந்தவர்களையும் நான் மதிக்கவில்லை. என்னை நாடிவந்திருக்கும் தவமுனிவரை மணக்க என் சித்தம் நாடுகிறது. அவர் முதிர்ந்த வயதினராயினும் நான் அவரையே மணந்துகொள்வேன். தவமதிச் செல்வம் ஒன்றினால் நான் சகல நன்மைகளையும் அடைவேன்! தவத்தினால் இம்மை மறுமைப் பயன்களை அடைந்தவர் எண்ணிலடங்குவரோ? தாம் அறியாததோ இது? தமது விருப்ப மென்ன?" என்று கேட்டாள்.

அரசன், "நீ உன்னுடைய முடிவான அபிப்பிராயங் கூறியபின் நான் என்ன சொல்லப்போகிறேன். இனி என் விருப்பம் எந்தவிதத்தில் பயன் தரும்?"



எனக் கூறித் தன் முகத்தில் விசனக்குறிப்பைக் காட்டினான்.

லோபாமுத்திரை, நல்ல விவேகி. சாஸ்திர ஞானமும் உலகஞானமும் கைவரப் பெற்றவள். ஆதலால் அவள், தந்தையை நோக்கி, "விசனிப்பது வீண். அன்றியும் இது அறியாமையாகும். இப்படிப் பேசுவதைப் பற்றி என்னை மன்னிக்கவேண்டும். நீர் என்னிடம் கொண்ட அன்பினாலும் நான் உலகவாழ்வைப் பெரிதாயெண்ணியிருப்பே னென்கிற ஓர் எண்ணத்தினாலும், சாஸ்திரஞான முடையவராயிருக்கும் பெரியார் அரிதென வியந்துபேசுந் தவஞானச் செல்வப் பெரியாரை மருமகனாக அடைய மயங்குகிறீர்! தவஞானப் பெரியாருடைய சம்பந்தத்தினால் நான் புனிதமடைவது மன்றி உம்முடைய குலமும் நீரும் புனிதமடைவீர்! இது திண்ணம். மக்களாய்ப் பிறந்த பேர்கள், தருமத்தில் சிரத்தையுடையவரா யிருந்து அதனால் தவஞானமடைந்து அந்தத் தவவன்மையினால் சகலலோகசரண்யனாகிய சிவபெருமானுடைய திருவருட் செல்வம் பெற்று முடிவில் முத்தியடையவேண்டும். இன்றேல் இந்தப் பிறப்பு பயனற்றதாம். அப்படிப்பட்ட உயர்ந்த நிலையில் நம்மைச் சேர்ப்பிக்க, ஜகதீசன் நம்பாற் கொண்ட கருணையினாலேயே இந்த அறிய சம்பந்தத்தைக் கூட்டிவைக்கிறார். இதனை மறுப்ப தழகல்ல" என்று கூறி அவனைத் தேற்றினாள்.

அரசன் மனந்தேறி முனிவரிடம் வந்து வணங்கித் தன் புதல்வி கூறியதை ஆதியோடந்தமாய்த் தெரி

வித்தான். முனிவர் கேட்டு மகிழ்ந்தார். பின் அரசன் ஒரு நல்ல நாளில் தன் புதல்வி லோபாமுத்திரையை அகஸ்தியருக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

அகஸ்தியர் லோபாமுத்திரையை அழைத்துக் கொண்டு ஒரு வனஞ்சென்று அங்கே ஓர் ஆசிரமமேற்படுத்திக்கொண்டு அதிலே வசித்தார். லோபாமுத்திரை கற்பிலே சிறந்த உத்தமகுண மாதாகையினால் தன் கணவனுடைய குறிப்பறிந்து அவர்க்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்து அவர் மனமகிழ நடந்து வந்தாள். (வரும்)

---

(1) அச்சுத நமவெனப் பச்சிலை யிடுநிதம்.
(2) ஆலிலை துயில்திரு மாலருள் பெறநினை.
(3) இலையரி யென்றவன் நிலையறி நெறிநில்.
(4) ஈறில் நல்லின்பப் பேறருள் பவனரி.
(5) உரகணை யவனிரு சரணமென் மலர்முடி.
(6) ஊரெடுத் தாண்டவன் பேரெடுத் தோதுநீ
(7) எழுமுன்ஸ்ரீ ஹரியெனத் தொழுதெழு துயில்நிதம்.
(8) ஏதமில் அன்புநீ மாதவ னிடத்தில்வை.
(9) ஐவர்க் கருளிய தெய்வநற் கருணையன்.
(10) ஒளிர்மணி வண்ணன்செந் தளிரடி சரணடை.
(11) ஓங்கலைக் குடையெனத் தாங்கிய செயலுணர்.
(12) ஔவைசொற் படிநட செவ்வியல் தருமரி.

A.S.B..

## ஹாஸ்யம்

ஓர் ஊரில் ஒரு வேளாளனிருந்தான். அந்த ஊரில பலகாரக்கடை கிடையாது. விவசாயியானதால் அவன் அந்த ஊரைவிட்டு வெளியூர் போவதுமில்லை. ஆனால் அவனுக்கு வடை தின்னவேண்டுமென்கிற ஆசையுண்டாயது. ஒரு நாள் அவன் தன் மனைவியைப் பார்த்து, "பாழும் ஊரில் என்ன இருக்கிறது? ஒரு பலகாரக் கடைக்கு வழியில்லை. இருந்தாலாவது வாய்க்கு வேண்டுமானதைச் சுடச்சுட வாங்கிச் சாப்பிடலாம்" என்று சலித்தாற்போல் பேசிக்கொண்டான்.

மனைவி, "என்ன பலகாரம் வேணும் உங்களுக்கு? நான் பண்ணித்தாரேன்" என்றாள்.

வேளாளன், "சுடச்சுட வடைவேணும்! இன்னைக்குப் பண்ணித்தா பாக்கலாம்" என்றான்.

மனைவி, "ஒருபடி உளுந்தும் எண்ணெய் அரைவீசையும் வாங்கிக்கொண்டுவந்து கொடுங்கள். கால் மணிநேரத்தில் வடை தாரேன் உங்களுக்கு" என்றாள்.

வேளாளன் உடனே கடைக்குப்போய் அந்தச் சாமான்களை வாங்கிக்கொண்டுவந்து கொடுத்து "நான் வயலுக்குப் போய் இதோவாரேன். வடை கொடுக்கணும்" என்றான்.

மனைவி, "உளுந்து ஊறவேண்டாமா? ஊறினதும் அரைக்கணும்! அரைச்சதும் தட்டியெடுக்கணும்! இதற்கிடையில் சமையலும் ஆகணும்! எல்லாமாக மத்தியான மூணு மணி செல்லும்" என்றாள்.

வேளாளன் "சரி அப்படித்தான் ஆகட்டும்" என்று கூறி வயலுக்குப்போய் அவ்விடத்துவேலைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு பகல் ஒருமணிக்கு வந்து குளித்துப் போஜனமுண்டு சற்றுப்படுத்தான். அவன்மனைவியும் உணவுண்டு சிரமம் பாராமல் மாவரைத்து வடை தட்டத் தொடங்கி, அவசர அவசரமாக நூறுவடை தட்டியெடுத்தாள்; எடுத்ததும், நன்றாயிருக்கிறதோ பார்ப்போம் என்று கருதி, ஒருவடை யெடுத்துப் பிட்டு வாயிற் போட்டாள்; அது மொறுமொறு என்று நன்றாயிருந்தது. அதைத்தின்றதும் அவள் இன்னொரு வடையை யெடுத்து வாயிற்போட்டாள். அதுவும் அப்படியே நன்றாயிருந்தது. அதையும் தின்று இன்னொன்று எடுத்துண்டு இப்படியே எல்லா வடைகளையுந் தின்று அவள் வயிற்றை நிரப்பிக் கொண்டாள்; "ஐயோ, வடை கேட்டவர்க்கு வடையைக் காணோமே!" என்று எண்ணிப் பாத்திரத்தைப் பார்த்தாள். அடியில் ஒருவடை யிருந்தது. "அடடா என்ன செய்கிறது. எல்லா வடைகளையுந் தின்றுவிட்டோமே! இனிமேல் தட்டி எடுக்கலாமென்றால் மாவுமில்லை, எண்ணெயுமில்லையே! இந்த ஒரு வடையை யாவது வைத்திருப்போம்" என்று அதைப் பத்திர



மாய் மூடிவைத்திருந்து கணவன் எழுந்ததும் இந்தாருங்கள் வடை என்று சொல்லி ஒரு சிறு தட்டில் அந்த ஒரு வடையை வைத்தாள்.

வேளாளன் பார்த்து, "என்ன எழவு இது! ஒரு படி உளுந்துக்கு ஒரு வடைதானா ஆச்சு?" என அவள், "நான் பொய் சொல்லமாட்டேன் இந்த அற்பத்துக்கெல்லாம். நூறு வடையாச்சு! ஒரு வடையெடுத்து வாயிற்போட்டேன். அது மொறுமொறு என்று நன்றாயிருந்தது. இன்னொன் றெடுத்துப் போட்டேன், அதுவும் நன்றாயிருந்தது. இப்படியே 99 வடைகளைத் தின்றுவிட்டேன். பிறகுதான் உங்கள் ஞாபகம் வந்தது. வடை ருசியில் உங்களை மறந்தேவிட்டேன். பின் என் பிழையை எண்ணி வருத்தப்பட்டு இந்த ஒரு வடையையும் உங்களுக்கென்று காப்பாற்றி வைத்திருந்தேன். இதையும் தின்ன வாயில்ஜலம் ஊறியது. பாழும் நாக்கே, நூறு வடைகளினுடைய ருசி பார்த்தாயே! போதாதா!, என்று கூறி நாவை அடக்க நான் பட்ட பாடு தெய்வம் அறிந்துபோச்சு" என்றாள்.

வேளாளன், "அடிபாவி, நூறுவடைகளை எப்படியடி தின்றாய்? சண்டாளி!" என்று கூறி வாயைப் பிளந்துகொண்டு வியந்தான்.

அவள், "இதோ இப்படித்தான் தின்றேன் பாருங்களேன்" என்று கூறி அந்த ஒரு வடையையும் வாயிற் போட்டுக்கொண்டு தின்றுவிட்டு "இந்த சாமார்த்தியங் கூட எனக்கில்லை என்று நினைத்தீர்களா?" என்றாள்.

வேளாளன், வாய்பேசாமல் தலையில் துணியை போட்டுக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டு ஆண்டியானான். அந்த ஆண்டியை நான் சென்ற சித்திரா பூர்ணமியன்று காஞ்சியில் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியின் ஸ்டேஜ் மானேஜராகிய ரத்தினம் என்பவர்கள் செய்த அன்னதானத்துக்கு வந்த பரதேசிக் கூட்டத்திற் கண்டேன். கண்டதும், ரத்தினத்தினிடம் சொல்லி "இவர் வடையிற் பிரியம் கொண்டவர். இவருக்குப் பத்து வடைபோடச் சொல்லுங்கள் சாப்பாட்டில்" என்று கூறி அவருக்குத் திருப்திகரமாகப் போஜனஞ் செய்து வைத்து விட்டுச் சென்னைக்கு வந்தேன்.

(பாலவிநோதினி)

---

## சிவஞானபோத மூலமும் தெளிபொருள் விளக்க உரையும்

சிவஞானபோதம், சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய காமிகமுதல் வாதுளமீறாயுள்ள 28 சிவாகமங்களுள் ஒன்றாகிய ரௌரவ ஆகமத்துள், 12-வது அத்தியாயம், 73-வது பாசவிமோசன படலத்து அனுஷ்டுப்புச் சந்தசாய்த்துவாதச சூத்திரவடிவமா யமைந்துள்ளது. ஆரியத்திலுள்ள இதனைத் தமிழில் மெய்கண்டதேவர் மொழிபெயர்த்தருளி, அச்சூத்திரத்தின் பொருளை வசனவடிவமாகவும் செய்யுள்வடிவமாகவும் வரைந்தருளினர். பேதபரமாகவும் அபேதபரமாகவு மிருக்குமிவ்வுரை மக்கட்கு மயக்கந்தருவதாமெனக் கருதி, வேதாந்த தருக்க போதகாசாரியர் கோ. வடிவேலு செட்டியார் அவர்கள் மேற்படி 12 சூத்திரங்கட்கும் அபேதபரமாகத் தெளிபொருள் விளக்க உரை யொன்றியற்றியிருக்கின்றார்கள். இவ்வுரை 70 சாஸ்திரங்களினின்றும் மேற்கோள் காட்டப்பட்டு மிகு விரிவாக வரையப்பட்டிருக்கின்றது. இது டிம்மி 16 பக்கங்கொண்ட 256 பக்கமுடையது. இப்புத்தகம் சென்னை, கோமளேசுவரன் பேட்டை, அம்பாவிலாச புத்தகசாலை, மங்கலம் ஷண்முக முதலியாரிடத்து ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும்.

---

## சொற்சோர்வு படேல்

ஒரு கிராமத்தில், பொன்னப்பன், சின்னப்பன். என்று பெயர்கொண்ட இரண்டு சகோதரர்களிருந்தார்கள். அவர்களில் பொன்னப்பன் பெரியவன், சின்னப்பன் சின்னவன். இவர்களுக்கு அன்னவஸ்திரத்துக்குப் போதுமான பூஸ்திதியிருந்தது. சின்னப்பன் விவசாயத்தில் கெட்டிக்காரன். பொன்னப்பன் சாதுரியமாய்ப் பேசுவதிலும் பலபேருடன் நட்புபாராட்டி அவர்களை அநுசரித்து நடந்து வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொள்வதிலும் குடும்பச் செலவு வரவுகளைக் கவனிப்பதிலும் வல்லவன். ஆகவே சின்னப்பன் வயல் வெளிக்குப் போய் விவசாயத்தைக் கவனிப்பதிற் கண்ணுங் கருத்துமா யிருந்தான். பொன்னப்பன் வீட்டிலிருந்து வருபவர் போகிறவர்களிடம் பேசவேண்டிய விதத்திற் பேசி, உபசரிக்கவேண்டிய விதத்தில் உபசாரணை செய்து குடும்பத்தைக் கவனித்து வந்தான்.

இருவரும் மிகவும் ஒற்றுமையுடனிருந்து தத்தம அலுவல்களைக் கவனித்து வந்தார்கள். இப்படி யிருக்கையில் இவர்களை ஊராரும் உறவினரும் புகழ்ந்து கொண்டாடினார்கள். பின் இருவருக்கும் விவாகமாயிற்று.

அப்பால் கொஞ்ச காலத்திற்கெல்லாம் சின்னப்பன் மனைவி, தன் புருஷனைப் பார்த்து, "நீங்கள் மட்

டு தினந்தோறும் வயல்வெளிக்குப்போய் காயலைவது போல அலைந்து சாகிறீர்களே! உங்களண்ணா, இருந்த இடத்தை விட்டசையாமலிருந்து வருகிறவர் போகிறவர்களுடன் உல்லாசமாகப் பேசிக்கொண்டு சுகமாகக் காலங்கழிக்கிறாரே! அவர் மனைவியும் நினைச்சபோதெல்லாம் புருஷனைப் பார்த்துக் கொண்டும் பேசிக்கொண்டும் ஆநந்தமாயிருக்கிறாள். நீங்கள் சாகிறீர்கள். நானும் நாதனற்றவள்போல் வழியை வழியைப் பார்த்துக் கொண்டு வயிறுகாயக் கிடந்துழல்கிறேன். ஏன் இப்படி? நீங்கள் சிலமாதம் வீட்டிலிருங்களேன் அவரைப் போல், அவர் உங்களைப்போல் வயல்வெளிக்குப் போய் அந்தக் காரியங்களைக் கவனித்துவிட்டு வரட்டும்'' என்றாள்.

இப்படி தலையணைமந்திர உபதேசம் தலைக்கேறவே அவன் அண்ணனிடம் போய் ''நான் சிலகாலம் வீட்டிலிருந்து உங்கள் அலுவலைக் கவனிக்கிறேன். நீங்கள் வயல்வேலைகளைக் கவனிக்க என்னைப்போல் வெளியே போய் வாருங்கள்'' என்றான்.

பொன்னப்பன் ''நல்லது தம்பி உனக்கு இந்த வழியில் அநுபவம் போதாதே! உன்னால் இங்கிருந்து சமாளிக்க முடியுமா? வீட்டிலிருந்தாலும், அவரவர் தகுதிக்குத் தக்கபடிபேசி உபசரிப்பதும் அவர்களிடம் உபசரணை பெறுவதும் சுலபமான காரியமாக எண்ணப்படாது. பேச்சில் வெகு ஜாக்ரதையாகப் பேசவேண்டும். உபசரணையிலும் ஜாக்ரதையாகக் கவனித்துச்



செய்யவேண்டும். அதைப்பற்றி ஆலோசிக்கவேண்டியதாயிருக்கிறது'' என்றான்.

சின்னப்பன் ''அப்படியானால் உங்களுடன் சிலமாத காலமிருந்து உங்களுடைய இந்தச் செய்கைகளையெல்லாம் பழக்கிக்கொள்கிறேன். பிறகு நீங்கள் வெளியே போங்கள்'' என்றான். பொன்னப்பன் ''அப்படியே ஆகட்டும்'' என, சின்னப்பன் அன்றுமுதல் பொன்னப்பனுடனிருந்து விவகாரங்களைக் கவனித்து வந்தான்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் ஒரு நண்பனுடைய தாயார் இறந்துபோனாள். அவன் வீட்டுக்கு உபசாரங் கேட்கப் பொன்னப்பன் புறப்பட்டான். சின்னப்பனும் அவனுடன் போனான்.

பொன்னப்பன் அந்த வீட்டுக்குப் போனதும ''என்னப்பா இப்படி வந்தது? மின்னாமல் இடிக்காமல் மழை பெய்ததுபோலிருக்கிறதே! நல்ல புண்யவதி! பரோபகாரி! அந்த அம்மாள் உனக்குமட்டுமா தாயார்? ஊருக்கெல்லாம் தாயார்! என்ன செய்யலாம்! தெய்வச்செயல்!'' என்று உபசாரங் கூறிவிட்டுத் திரும்பினான். பின் சிலநாட்களுக்கெல்லாம் பொன்னப்பன் வயல்வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினான். சின்னப்பன் அண்ணன் செய்த வேலைகளைக் கவனிக்கலானான்.

அப்பால் ஒரு நாள் அந்த ஊரில் ஒருவனுடைய மனைவி யிறந்துபோனாள். அவன் வீட்டுக்குப் போய் உபசாரங் கேட்க நேர்ந்தபடியால், சின்ன



210774

வீட்டுக்குப் போனான். மனைவியை இழந்தவன் சின்னப்பனைக் கண்டதும் வாய்விட்டுக் கதறினான்.

சின்னப்பன், "ஐயோ பாவம்! என்ன செய்யலாம், நல்ல புண்யவதி, அவள் உனக்கு மாத்திரமா மனைவியாயிருந்தாள்! ஊருக்கெல்லாம் மனைவியாயிருந்தாள்! நல்லவர்களைத்தான் நமன்கொண்டு போய்விடுகிறான்!" என்றான்.

இப்படிச் சொன்னதுந்தான் தாமதம்! மனைவியை இழந்தவன் எழுந்து சின்னப்பன் குடுமியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "போக்கிரிப்பயலே என்ன சொன்னாய்! மகாபதிவிரதையாகிய என் மனைவியை ஊராருக்கெல்லாம் மனைவியென்று சொல்லுகிறாய்! இவ்வளவு துணிவா உனக்கு?" என்று அதட்டிப் பளீர் என்று கன்னத்திலறைந்தான்.

சின்னப்பன், "ஐயோ, நான் சொன்னதில் என்ன தப்பு? என் அண்ணா அன்று அவருடைய நண்பரின் தாயார் இறந்துபோனபோது, 'ஐயோ! உனக்கு மாத்திரமா அந்த அம்மாள் தாயார், ஊருக்கெல்லாம் தாயார்' என்றாரே. அப்படித்தானே நான் இப்போது சொன்னேன்! இதுதானே உபசாரம் கேட்கும் முறை? ஜாக்கிரதையாய்த் தானே பேசினேன்" என்றான்.

அவன் இதைக் கேட்டதும் சின்னப்பனை மடையனென அறிந்து அவனை வீட்டை விட்டு வெளியே தள்ளினான். சின்னப்பன் உடனே தமையனைத் தேடிக்



கொண்டோடி, "நான் என் மனைவி பேச்சைக் கேட்டு மடையனானேன். நான் செய்தது பெரியபிழை. அதை மன்னித்து உங்கள் அலுவல்களை நீங்களே கவனியுங்கள். இன்றுமுதல் என் அலுவல்களை வழக்கம்போல நான் கவனிக்கிறேன். எனக்கும் உலகவிவகாரத்துக்கும் வெகுதூரம்" என்று கூறித் தான் இழவுக்குப் போய்ப் பேசத்தெரியாமற் பேசிப் பட்டபாட்டைக் கூறி வருந்தினான். தமையன் அவனுக்கு நல்லமதி கூறித் தேற்றி வீடுவந்து தன் வேலையைக் கவனிக்கலானான். இதனாலேதான் ஒளவையார் "சொற்சோர்வு படேல்" என்று போதித்தார்.

---

உலகில் வேகமாய்ச் செல்லும் பிராணிகளில் சிறந்தது 'செபனோமியா" என்ற பெயருடைய ஈ. இது உயரமான மலைப் பிரதேசங்களில் சஞ்சரிக்கிறது. ஒரு மணிக்குச் சுமார் 815 மைல் தூரம் செல்லுகிறது. இது பறக்கும்பொழுது இதன் சிறகுகள் ஒரு விநாடிக்குள் அநேகம் ஆயிரம் தடவைகள் அடித்துக்கொள்ளுமாம். இது பறக்கும்பொழுது தரையில் ஒருவித ஆரஞ்சுவர்ணம் திடீரென்று தோன்றித் திடீரென மறைந்துவிடுமாம். இந்த ஈயை வேகத்தில் தோற்கடிக்க இப்பொழுது இவ்வுலகில் வேறு பிராணிகள் இல்லை. இதற்கடுத்தபடி வேகமுடையது ஆசியாவில் மலைகளில் காணப்படும் ஒரு பறவை. அதற்கு (Swift) ஸ்விப்ட் என்ற காரணப்பெயர் கொடுத்திருக்கிறார்கள். அது ஒரு மணிக்கு 220 மைல் செல்லுகிறது. அதற்கும் அடுத்தபடியாக வேகமுடைய பிராணி இந்தியாவிலுள்ள சிறுத்தைப்புலிதான். இது மணிக்கு 60 மைல்கள் போகும்.

---

# வளவனாயினும் அளவறிந் தழித்துண்

ஓர் ஊரில் சிக்கனமாய்ச் செலவு செய்பவன் ஒருவனிருந்தான். அவன் பெயர் கந்தன். கந்தன் தனக்குத் தேவையல்லாதது எவ்வளவு மலிவாய்க் கிடைப்பினும் விலைக்கு வாங்கமாட்டான்; தேவையானதையும் கடனுக்கு வாங்கவே மாட்டான்; கையில் ரொக்கங் கொடுத்து ஒரு காலணா கூடவரும் இடந்தேடிப்போய் வாங்குவான். ஒரு காசு செலவு செய்தானாலும் செலவு செய்யுமுன் நாம் செலவு செய்வது நியாயமானதா நமது அந்தஸ்துக்கு யோக்கியமானதா என்று கவனிப்பான்.

இப்படி யிருந்துவந்தமையினால் கந்தன் பிறரிடம்போய் ஒன்றையும் கேட்கவேண்டிய அவசியமில்லாமல எல்லோரும் மதிக்க ஜீவனம் செய்து வந்தான்.

அந்த ஊரில் பாக்யநாதன் என்பவனொருவ னிருந்தான். அவன் கந்தனுடைய குணத்துக்கு முற்றும் மாறான குணமுடையவன். பத்து ரூபாய் வரும்படி வருவதானால் அது கைக்குவந்து சேருவதன்முன்பே மனம்போனபடி பயமில்லாமல் கடனுக்குப் பல சாமான்களை வாங்கிப் பிறகு தவணைப்படி நாணயஞ் செலுத்த வழியில்லாமல் கண்ட இடத்திற் பணம் கடன்கேட்டுத் திண்டாடுவான். ஆனால் ஒவ்வொரு நிமிஷமும் புதிது புதிதான எண்ணத்திலாழ்ந்து அந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள முயற்சி செய்வதில் பிரயாசைப் பட்டுத் தேக பலத்தையும் மனோபலத்தையும் இழப்



பான்; அவன் தன் நிலைமையை அறியாமலே மதோன் மத்தனாகத் திரிவான்.

இவன் ஒரு நாள் கந்தனிடம்போய் ஐந்நூறு ரூபாய் கடன் கேட்டான். கந்தன், "நீயோ தடபுடலாய்ச் செலவு செய்பவன். நான் இப்போது கொடுத்து விட்டால் பிறகு நீ எப்படி கொடுப்பாய்?" என்று கேட்டான்.

பாக்யநாதன், "நான் எப்படியாவது வரும்படியில் மீதம்பிடித்து மாதங் கொஞ்சமாக நாலைந்து தடவையில் செலுத்திவிடுகிறேன்" என்றான்.

கந்தன் "அது உன்னால் இந்த ஜன்மத்தில் முடியாது. நீ கடன்வாங்க அஞ்சாதவன்; செலவு செய்யப் பின் வாங்காதவன்; உனக்கு வருவதெல்லாம் போதாது. நீ ஒரு சமயம் நூறு ரூபாவுக்குத் தீபாவளிக்குப் பட்டாசுக்கட்டி வாங்கியதாகச் சொல்லியிருக்கிறாய்! அப்போதே உன் புத்தியை நான் அளந்துகொண்டேன். என்னிடம் கடன் வாங்கி எனக்கு மாதம் கொஞ்சமாக மீதம் பிடித்துக் கொடுப்பதைவிட நீ யார் யாருக்குக் கடன் கொடுக்கவேண்டுமோ அவர்களிடம தவணை கேட்டுக்கொண்டு தலைக்குக் கொஞ்சமாக மாதந்தோறும் கொடுத்துக் கடனிலிருந்து விடுபட முயல். வீணே, உன்னுடைய கடன்காரருடன் என்னையும் ஒருவனாகச் சேர்த்துக்கொண்டு எனக்கு உத்தரவு சொல்லும் கஷ்டத்தையும் தேடிக்கொள்ளாதே! போ" என்று புத்திமதி கூறியனுப்பினான்.

# மூடனுடைய நட்பினால் அவமானமே யுண்டாகும்

ஒரு மாப்பிள்ளை, ஒரு மூடனைத் தனக்குத் தோழனாக அழைத்துக்கொண்டு தன் மாமனார் வீட்டுக்குப் போனான். போகும்போது, மாப்பிள்ளை, "நண்ப, என்னுடைய தலைப்பாகை தவிர மற்றவைகளெல்லாம் இரவல்! ஆகையினால் நீ என் மாமனார் வீட்டில் இதைப்பற்றிப் பிரஸ்தாபியாதே!" என்று சொல்லிக் கொடுத்து அழைத்துக்கொண்டுபோய் மாமியார் வீடு சேர்ந்தான். இவர்களைக் கண்டதும் மாமனார் மாப்பிள்ளையின் நண்பனைப் பார்த்து, "தம்பி யோகக்ஷேமம் எப்படி?" என்று கேட்டான். நண்பன், "ஐயா, மாப்பிள்ளைக்கு அவருடைய தலைப்பாகை தவிர மற்ற ஆடைகளெல்லாம் இரவல்! இது மாத்திரம் எனக்குத் தெரியும். மற்வைகளைப்பற்றி என்னிடம் கேட்க வேண்டாம்" என்றான்.

இப்பொழுது மாப்பிள்ளையின் தலை கவிழ்ந்தது, "மூடனுடைய நட்பு இப்படித்தான் அவமானந்தரும். மூடனுடன் ஸ்நேகம் செய்வதும் அவனிடம் இரகஸ்யத்தைத் தெரிவிப்பதும் தவறு" என்று தேர்ந்து அவன் தன் மனதைத் தேற்றிக்கொண்டான்.

# ஏயர்கோன் கலிக்காம நாயனார் சரித்திரம்

சோழ நாட்டில் திருப்பெருமங்கலம் என்று ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் வேளாளர் குலதிலகர் ஒருவரிருந்தார். அவர் சிறந்த சிவபக்தசிரோமணி. அங்கே அருகாமையில் திருப்புன்கூர் என்றொரு சிவக்ஷேத்திரமிருக்கிறது. அந்தச் சிவாலயத்தில் கலிக்காமர் அநேக திருப்பணிகள் செய்து பேர் பெற்றிருந்தார்.

இவர் சிவாபராதிகளைக் கண்டால் எளிதில் விடமாட்டார்; சிவநேசர்களையெல்லாம் தம்முடைய ஆருயிர்த் தோழர்களாகக் கொண்டு ஆதரிப்பார்.

இந்த நாயனார் காலத்திலே சுந்தரமூர்த்திசுவாமிகள் அவதரித்துப் பரம சிவபக்த சிரோமணிகளாக விளங்கினார்கள். இவர் பரவையென்கிற ஒரு பெண்ணை மணஞ்செய்திருந்தார். பரவை இவரிடம் ஒரு சமயம் மன வேறுபாடடைந்து, இவரை வெறுத்தாள். அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரமசிவனைத் துதித்துப் பாடி தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ஊடலைத் தீர்த்துச் சிநேகமுண்டாக்கி வைக்கும்படி வேண்டிக் கொண்டார். சிவபெருமான் அவருடைய பிரார்த்தனைக் கிணங்கி பரவை யென்கிற அவருடைய மனைவியின் வீட்டுக்குத் தூதுபோய் வந்தார்.

இதைக் கேட்டறிந்த கலிக்காம நாயனர் அகில நாயகனுகிய சிவபெருமானை இந்தச் சுந்தரன் ஒரு பெண் வீட்டுக்குத் தூதனுப்புவதா என்று கருதிச் சினங் கொண்டு, "அந்தப் பாதகனை நான் என்று காண்பேனே. அவன் அன்றே ஒழிந்தான். இதை நான் செய்யாம லிருப்பதில்லை. இதனுல் எனக்கு விளைவது விளையட் டும்" என்று சபதம் செய்திருந்தார்.

இப்படி இவர் சபதம் செய்ததை யறிந்த சுந்தர மூர்த்தி, "அந்தோ இது என்ன விபரீதம். இதிலிருந்து எவ்வாறு தப்புவேன்! ஈசா! கைலாசவாசா! சிற்சபேசா! நீ தான் காப்பாற்ற வேண்டும்" என்று சிவபெருமா னிடம் முறையிட்டுக்கொண்டார்.

சிவபெருமான் இருவரையும் ஒன்று சேர்த்துவைப் பதற்குத் திருவுளங்கொண்டு, கலிக்காம நாயனர்க்குச் சூலை நோயை உண்டாக்கினர். அது அக்கினியிலே காய்ச்சப்பட்ட வேலைப்போல் மிக்க வேதனை செய்தது. நாயனர் அதனுல் மிக்க வருந்திப் பரமசிவ னுடைய திருவடிகளைச் சிந்தித்துத் துதித்தார்.

அச்சமயம் பரமசிவன் அவர் முன்னே தோன்றி, "சுந்தரனலன்றி அந்த நோய் தீராது" என்றார். கலிக் காமர், "ஸ்வாமி பரம்பரையாகத் தேவரீரையே மெய்க் கடவுள் என்று துணிந்து, தேவரீருக்குத் திருத்தொண் டுகள் செய்துவருகின்ற குடியிலுள்ளவன் நான். அப்ப டிப்பட்ட அடியேனை வருத்துகின்ற சூலை நோயைத் தங் களைத் தூதனுக ஏவிய இந்தச் சுந்தரனு தீர்ப்பது? நன்



றாயில்லையே! அவனுலே இந்த நோய் தீர்க்கப்படு வதைவிட இது தீராதொழிந்து என்னை வருத்துதலே நன்று" என்றார்.

இப்படிக் கூறியதும் சிவபெருமான் மறைந்து, சுந்தரமூர்த்தியினிடம் போய், "நீ கலிக்காமனிடம் போய் அவனுக்குண்டாயிருக்கும் சூலை நோயைத் தீர்த்து வா" என்றார்.

சுந்தரமூர்த்தி இறைவனுடைய இக்கட்டளையைக் கேட்டதும் மகிழ்ந்து, "ஸ்வாமி ஆக்ஞைப்படியே செய்கிறேன்" என இறைவன் மறைந்தார். பின் சுந் தரமூர்த்தி சுவாமிகள், கலிக்காம நாயனருக்குச் சூலை நோய் தீர்க்கும்படியாகச் செல்லும் சமாசாரத்தைப் பற்றி அவருக்கு ஓர் ஆள்மூலமாகத் தெரிவித்தார்.

அதைக் கேட்டதும் கலிக்காமர், "எங்கள் கட வுளைப் பெண்பாலிடம் தூதனுப்பிய சுந்தரனு என் சூலை நோயைத் தீர்த்தற்கு வருபவன்? நன்று! நன்று! அவன் இங்கே வந்து இந்த என் நோயைத் தீர்ப்பதற்கு முன்னே நானே வாள்கொண்டு இச்சூலை நோயை என் வயிற்றி னுேடும் கிழிப்பேன்" என்று உடைவாளையெடுத்துத் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்துபோனர். அப் பொழுது அவர் மனைவியாரும் அநுமரணஞ் செய்யப் புகும்போது சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அங்கே போய்ச் சேர்ந்தார். அவரைக் கண்டவளவில், கலிக்கம நாய னர் மனைவியார், தமது யத்தனத்தை விட்டுவிட்டு நாய

ஞரை எதிர்கொண்டு அழைத்து உபசாரங்களைச் செய்தார். சுந்தரமூர்த்தி, எங்கே நாயனுர் என்று கேட்டார். அவ்வம்மையார், "அவர் உள்ளே பள்ளிக்கொண்டிருக்கிறார்" என்று நடந்ததை மறைத்துச் சொன்னர். சுந்த மூர்த்திஸ்வாமிகள், "அப்படியா நான் அவரைப் பார்க்க விரும்புகிறேன்" என அவ்வம்மையார், நாயனுரைத் தம்முடைய நாயகனிறந்து கிடக்கும் இடத்துக்கு அழைத்துக்கொண்டு போனர்.

சுந்தரமூர்த்தி, அங்கே கலிக்காமர், இரத்தம் சோரக் குடர் சரிந்து உயிர் நீங்கக் கிடக்கக் கண்டு, வியப்பும் விசனமுமடைந்து காரணம் வினவினர். பின் அவ்வம்மையார் நடந்ததைக் கூறினர். சுவாமிகள், "ஓ அப்படியா? நானும் இவர்போல் இறந்துபோவேன்!" என்று சொல்லி உடைவாளை யெடுத்தார். அக்கணமே இறைவன் திருவருளால் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து அவர் கை உடைவாளைப் பிடித்துக்கொண்டார். சுந்தரமூர்த்தி ஆச்சரியப்பட்டுச் சிவபெருமானுடைய திருவருளை எண்ணி மகிழ்ந்து கலிக்காமனை வணங்கினர். கலிக்காமரும் சுந்தரமூர்த்தியை வணங்கினர். பின் இருவரும் நட்புகொண்டு திருபபுன்கூறுக்குப்போய்ச் சிவபெருமானுடைய திவ்யதரிசனங் கண்டு திருவாரூரை அடைந்தார்கள். அப்பால் கலிக்காமர் சுந்தரரிடம் விடைகொண்டு தம்மூருக்குச் சென்று சுகமாயிருந்து முடிவில் சிவபதமடைந்தார்.

---

21074



சுந்திரமூர்த்தி நாயனார், கலிக்காமர் இறந்து கிடப்பதைகண்டு தானும் இறந்துபோவேன் என்று சொல்லி உடைவாளை யெடுத்தார்.

[ப. 234

# ஒரு பறவையின் அறிவு

## உண்மையில் நிகழ்ந்தது.

கீழ் வரும் விஷயம் கட்டுக் கதையல்ல. உண்மையில் நிகழ்ந்ததே. "அலகாபாத் லீடர்" பத்திரிகையில், அந்தச் சம்பவத்தை நேரிற்கண்ட ஒரு கனவான் பின்வருமாறு எழுதியிருக்கிறார்—

அலகாபாத் ஜில்லாவில் ஹாண்டயதாஷி என்னும் நகரத்தின் பக்கத்தில் பாரத் என்னும் பெரிய ஒரு கிராமம் இருக்கிறது. அந்தப் பிரதேசங்களுக்கு டிப்டி கலக்டரா யிருப்பவர் மெயர்ப்டன் தில்லட்டு என்ற ஒரு ஐரோப்பியர். அவர் சென்ற நவம்பர் 28-ந்உ மாலை, "சாஸர்" என்னும் ஒரு ஜாதிப் பறவைகளை வேட்டையாடும் பொருட்டு காட்டுப்புறம் சென்றார். ஒரு வெடி வைத்தவுடன் ஏழெட்டுப் பறவைகள் இறந்து வீழ்ந்தன. மீண்டும் சுடத் தொடங்குகையில், அப்பறவைக் கூட்டங்களிலிருந்து ஒரு பறவை பறந்து வந்து துரையின் பாதங்களில் சரணாகதியடைந்து, துரையின் முகத்தை மிகவும் உருக்கமாகப் பார்த்து ஒரு மாதிரி இரக்கத் தொனியில் கத்தத் தொடங்கிற்று. அதன் கனிவான நோக்கையும், இரக்கமான குரலையும் பார்த்தவுடன் துரைக்கு மீண்டும் சுட மனம்

வரவில்லை, அம்மட்டோ! ஏன் நாம் அந்தப் பறவைகளைச் சுட்டோம் என்று அவருக்குப் பச்சதாபமும் உண்டாயிற்று. துரை அந்தப் பறவையைப் பிடித்தார். ஆனால் அது பயந்து ஓடவோ, பிடியிலிருந்து விடுபட முயலவோ செய்யவில்லை. துரையின் மனமாற்றத்தையும் இரக்கத்தையும் உணர்ந்துகொண்டதுபோல் அது அவருடைய கைகளிலும் தோள்களிலும் மாறிமாறிப் பறந்து உட்கார்ந்தது. அப்பறவையின் உத்தேசம் உடனே நிறைவேறிற்று. துரை, அப் பறவையை மிக்க அன்புடன் நோக்கி "இனி நான் ஒரு பிராணியையும் ஹிம்சிப்பதே இல்லை" என்று சபதம் செய்தார். அதைக் கேட்டவுடன் அச்சிறு பறவை மீண்டும் உற்சாகத்துடன் கத்தத் தொடங்கிற்று.

அதன் இஷ்டப்படி பறந்துபோகும்படி துரை விடவும், அப்பறவை துரையை விட்டுப் பிரியவில்லை. இப்பொழுதும் அது அவர் கூடவே இருக்கிறது. அவர் எங்கு சென்றாலும் அதையும் கூடக்கொண்டு செல்கிறார். கச்சேரிக்குப் போகும்போது கூட அது அவரை விட்டுப் பிரிவதில்லை. துரை, அதை மிகவும் பக்ஷமாக வளர்த்து வருகிறார். (ஆநந்தபோதினி)

---

பறவைகளை இரக்கமின்றிச் சுடும் பாவிகள் இதைக் கவனிப்பார்களாக. (பத்திராதிபர்).

## அகங்காரங் கொண்ட ஐரோப்பிய மாது

ஐரோப்பா கண்டத்தில் ஒரு நாட்டில் ஒரு மாதிருந்தாள். அவள் பரமசண்டாளியாயும் பரமதுஷ்டையாயு மிருந்தாள்; சூதும் வாதும் சேர்ந்து இப்படிப் பெண்ணுருக் கொண்டதோ என்று நினைக்கத் தக்க உருவம் படைத்தவள்; திருடுவதையே தனக்குத் தொழிலாகக் கொண்டிருந்தாள்.

இந்தக் கொடியபாவி பகவானை ஒரு நாளில் ஒரு நிமிஷமேனும் நினைப்பதில்லை. உலகத்தில் மானிடர்க்கெல்லாம் மரணகாலம் சமீபிப்பதுபோல் இவளுக்கும் ஒரு நாள் மரணகாலம் சமீபித்தது. அப்பொழுது அவளுக்குத் தான் அடையப் போகும் கதியைப்பற்றித் திகிலுண்டாயது. உண்டாகவே அவள் கடவுளை நோக்கிக் கதறினாள்.

இவள் மகாபாபியே யாயினும் கருணாநிதியாகிய கடவுள் இவளிடம் இரக்கங்கொண்டு ஒரு தேவதூதனை அனுப்பினார். அவன் வந்து சமாசாரம் விசாரிக்கையில், அந்த மாது "எனக்கு மரணகாலம் சமீபித்துவிட்டது. இனி நான் பிழைத்திருக்கப்போவதில்லை. நானோ மகாபாவி! இறந்தபின் என் கதியாதாமோ என நினைத்து அஞ்சுகின்றேன்" என்றாள்.

தேவதூதன்:—மாதே, உன் ஆயுள் நாளில் நீ யேதேனும் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறாயா? சொல்—யோசித்துச் சொல்—என்று கேட்டார்.

மாது:—(நெடுநேரம் யோசித்து) ஐயா, ஒரு நாள் பகல் முழுவதும் நான் பட்டினியாய்க் கிடந்தேன். சாயங்காலம் அகஸ்மாத்தாய்க் கோழிக் குஞ்சொன்று கிடைத்தது. அதனைச் நான் சமைத்துச் சாப்பிட யத்தனித்தேன். அச்சமயம் என்னைவிடப் பரம ஏழையாகிய ஒரு கிழவி என்னிடம் வந்து, "அம்மா பசி தாங்கமுடியவில்லை. ஏதாவது உணவிருந்தாற் கொடேன். உனக்குப் புண்யமுண்டு" என்று இரந்தாள். "நான் அவள்மீது இரக்கங்கொண்டு அக்கோழிக் குஞ்சின் மாமிசத்தில் ஒரு துண்டு மாமிசத்தை அவளுக்குக் கொடுத்தேன். அது தான் நான் என் ஆயுள் நாளிலே செய்த நன்மை" என்றாள்.

தேவதூதன்:—அம்மா, இது போதுமானது. இறக்கும்போது அந்தக் கோழிக் குஞ்சே உனக்குத் துணையாக வந்துசேரும். நீ அதைப்பிடித்துக்கொள். அது உன்னை ஸ்வர்க்கத்திற்குக் கொண்டுபோகும். கவலைப்படாதே" என்று கூறிச் சென்றான்.

பின் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவள் மரணமானாள். அங்கே அவள் முன் கோழிக் குஞ்சு வந்தது. தேவதூதன் சொன்னபடி அதனை அவள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அக்கோழிக் குஞ்சு அவளைத் தூக்கிச் சென்றது. அப்போது வேறு சில அஷ்டப் பெண்கள் இறந்தனர். அவர்கள் இவளுடைய புண்ணியத்தில் நாமும் ஸ்வர்க்கம் போய்ச் சேரலாமென்றெண்ணி, இவளுடைய ஆடையைப் பற்றிக்கொண்டு சென்றனர். அது கண்ட நமது பாதகி, "ஓ ஓ கோழிக் குஞ்சு என்னுடையது! இதில் நீங்களும் பங்குபெறுவதெப்படி? நான் கொடுக்க மாட்டேன்" என்று கூறி அவர்களை உதைத்துத் தள்ளினாள். உடனே அவள் தன்னைப் பாழான கொடிய நரகத்திலே கண்டாள்!



ஆகா என்ன விநோதம்! நான் எனது என்ற அகங்காரமல்லவா இந்த வேலை செய்தது! ஓர் ஏழைக்கு உதவிய உதவியானது ஸ்வர்க்கத்திற்கு அழைத்தது. இக்கோழிக் குஞ்சு எனது என்றெண்ணிய அகங்காரமானது நரகத்தில் தள்ளியது. சை! அகங்காரத்தை விட மனிதர்க்குப் பகையுண்டோ யோசிக்கில்? தெரியாமலா பெரியோர்கள் "அகங்காரங் கொள்ளாதே! அது உன்னை இகத்திலும் பரத்திலும் பகையாயிருந்து அழிக்கும்" என்று கூறினர்.

அந்தோ தற்காலத்தில் வீட்டுக்கு வீடு அகங்காரிகள் பெருகுகின்றனர். ஒரு வீட்டில் வீட்டுக்குத் தலைவன் சம்பாதிக்கிறான். அவன் அகங்காரத்தினால் பெற்றோர்களை அலட்சியம் செய்கிறான்; வேலைக்காரர்களை அலட்சியம் செய்கிறான்; அதனால் காசை விட்டெறிகிறான்; தாயைப் பேசாதே, வாயை மூடிக்கொண்டு ஒரு மூலையிலே கிட, சோறு சமைத்தாலும் அழைப்பார்கள்"

என்று அடக்குகிறான். அவன் மனைவி, நம்முடைய புருஷன் சம்பாதிக்கிறான் என்கிற அகங்காரத்தினாலும் நாம் ஆடையாபரணங்களில் எல்லோரிலும் மேலாயிருக்கிறோம் என்கிற கர்வத்தினாலும், கண் தலை தெரியாமல் நடக்கிறாள்; முன்பின் யோசியாமல் பேசுகிறாள்; பெரியார் சிறியார் என்ற பேதம் பாராட்டாமல் இராக்ஷஸியைப்போல் இரைகிறாள்.

அவர்களுடைய பிள்ளைகளோ, "அட உங்களைக் கழிச்சலில் கொண்டுபோக" எனப் பெண்கள் மண்ணை வாரி இறைத்து "அட உங்கள் தலையெடுப்பில் இடி விழ" என்று மனம் நொந்து திட்டவும், இறுமாப்புற்றுத் தகாத செய்கைகள் செய்கிறார்கள்.

இப்படி அகங்காரமென்பது பணத்திலோ, அதிகாரத்திலோ, பலத்திலோ உயர்ந்தவர்களை அண்டாமலிருப்பதில்லை. புத்திசாலியானவர்கள் அப்படிப்பட்ட அகங்காரத்திற்கு ஒரு சிறிதும் இடங்கொடுக்கமாட்டார்கள்.

---

பாலிற் கலந்தநீர் பாலாகிச் சற்கருமத்
தேலுதல்போற் சாதுசங்க மெய்தொருவன்-ஞாலத்து
மூடனே யாயினும் முத்தியடை வன்காண்
கேடகன்ற வேமாநீ கேள். (வேமனநீதிவெண்பா)

# கௌரி

செந்தமிழ் வழங்கும் பாண்டிவள நாட்டிற்கு இராஜதானி நகரமாகிய மதுராபுரி பட்டணத்திலே விக்கிரமனென்னும் பாண்டிய அரசன் மனுநீதி தவறாமல் ராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தான். அக்காலத்திலே அம்மதுரைமா நகரில் வேதவித்பன்னராகிய விருபாக்ஷ ரென்னும் பேர்கொண்ட ஒரு வைதிகப் பிராமணர் வசித்து வந்தார். அவ்வந்தணரும் அவர் மனைவியும் அந்த திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் அகில லோககர்த்தாவாகிய ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவர சுவாமியிடம் மெய்யான பக்திகொண்டுவழிபட்டு வந்தார்கள். அந்த பகவானுடைய கருணையால் இம்மண்ணுலகில் அடையத்தக்க சகல சுபபோக பாக்கியங்களையு மடைந்திருந்தார்கள். ஆனால் மக்கட்பேறு மாத்திரம் வினைப்பயனால் அவர்களுக்கு வெகுகாலம் கிட்டாதிருந்தது. அவ்வந்தணர் தமக்கு நேர்ந்த அப்பெருங் குறையை நிவர்த்திக்கும் பொருட்டு ஜகதீசனைக் குறித்து அரிய தவம் புரிந்தார். அதன்பின் ஜகதீசன் கிருபாகடாட்சத்தால் அழகென்பதே ஒரு மானிடக் குழந்தைபோன்ற உருவெடுத் துதித்ததெனச் சொல்லத்தக்க பேரழகுவாய்ந்த ஒரு பெண்குழந்தை பிறந்தது.

உள்ளக் கவலையை யொழிக்க வந்த ஒப்பிலாமணியென விளங்கும், அக்குழந்தைக்கு அவ்வந்தணர் கௌரியெனத் திருநாமம் புனைந்து, நாளொரு மேனி

யும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தார் பூர்வஜன்ம தவக்குறை முடிக்கும் பொருட்டு இம்மண்ணுலகுதித்த புண்ணியவதியாகையால் கௌரிக்கு ஐந்தாவது வயது வந்ததும் பிரமஞானந் தோன்றித் தன் தந்தையைப் பார்த்து, "அப்பா!" வெனவழைத்து, "துன்பத்திற் கிடந்தரும் இம்மண்ணுலகத்தினின் றீடேற அடியேனுக்கு ஒரு மந்திரம் உபதேசித் தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தாள்.

மழலைமொழி பகரும் தன் குழந்தையிடத் துண்டாயிருக்கும பிரமஞானத்தைக் கண்டு அவ்வந்தணர் பரமானந்தங் கொண்டு, "என் கண்ணே! கண்ணினுள் மணியே! என்னுருயிரே!" என்றழைத்துக் குழந்தை கௌரியைக் கையாலெடுத்து, மார்போடணைத்து முத்தமிட்டு, மடிமீதுட்கார வைத்துக்கொண்டு ஸர்வாண்ட கோடிகளையுந் தன்னிடத்தினின்று தோற்றுவித்த உலக மாதாவாகிய பராசக்தியினுடைய திருமந்திரத்தை உபதேசித்தருளினார். அன்று முதல், சந்திரவதன சுந்தரரூபியாகிய கௌரியானவள் தன் தந்தை யுபதேசித்த மந்திரத்தைச் சிந்தையிலமைத்து நாடோறும் தியானித்து வந்தாள். விருபாக்ஷனென்னும் அவ்வந்தணர் குழந்தை கௌரியின் ரூபலாவண்ணியத்தையும் அவள் ஞானசிரோமணியாய் விளங்குவதையுங் கண்டு, பிரமசரிய நெறிதவறாதவனும், வேதவித்பன்னனும், சிவபக்தியுள்ளவனுமாகிய குணவானுக்கே விவாகம் செய்து கொடுக்கவேண்டுமெனத் தீர்மானித்திருந்தார்.



இவ்வாறிருக்கையில் கௌரிக்கு வயது ஏழு நிறைந்து எட்டாவது பிறந்துவிட்டது. அதுவரையிலும் அவ்வந்தணர் எண்ணியவாறு மணமகன் கிடைக்கவில்லை. எட்டாவது வயதில் விவாகம் நடத்துவதே பிராமண விவாகத்தின் முறையாதலாலும், அந்த வயதுடைய ஒருபெண்ணைப் பிரமசரிய நெறிதவறாத ஒருவனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தால் அவனுடைய இருபத்தொரு தலைமுறையும் முத்தியானந்த மடையுமென்று சாஸ்திர மேற்பட்டிருப்பதாலும் அவ்வந்தணர் தம் குழந்தை கௌரிக்கு அப்பேர்ப்பட்ட சமயம் தவறிப்போகிறதே என்று மிக்க வியாகூலப்பட்டுக்கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு நாள் ஒரு வைஷ்ணவ பிரமசாரி அவர் வீட்டுக்குப் பிக்ஷைக்கு வந்தான். பிக்ஷைக்கு வந்த வைஷ்ணவ பிரமசாரி தேஜஸைக் கண்டோ, அல்லது தன் குழந்தை கௌரிக்கு விவாகத்துக் கேற்பட்ட வயது கடந்துபோகிறதென்றோ, கௌரியின் விதிவசத்தாலோ அவ்வந்தணர் "விதிவழி மதி" என்பதற் கேற்ப, தான் முன்பு எண்ணியிருந்த எண்ணமெல்லாம் மறந்து, அவ்வைஷ்ணவ பிரமசாரிக்குக் கௌரியைக் கொடுக்க நிச்சயித்து, அவர் மனைவி முதலியோரின் அனுமதியின்றி அவன் கையில் தாரைவார்த்து விட்டார். பின்பு அவர் வீட்டு ஜனங்கள் குலகோத்திரம் விசாரியாமல் தாரைவிட்டதை யறிந்து மனம் மிகவும் வருந்தி வைஷ்ணவனென்கிற குற்றமிருப்பினும், மறுக்க

முடியாமை கண்டு, அவர்களுமதற்கிசைந்து விவாகம் நடத்தவேண்டிய தாயிற்று.

அந்தப் பிரகாரமே விரூபாக்ஷனென்னும் அந்தணர் கௌரிக்குக் காலோடு தலைவரையில் வேண்டிய ஆபரணங்களைப் பூட்டி, அக்கினி சாட்சியாகத் திருமணஞ்செய்து முடித்தார். விவாகம் முடிந்தவுடன் வைஷ்ணவ பிரமசாரி "குருடன் கண்ட புதையல்போல்" தனக்குக்கிடைத்த மாதுசிரோமணி கௌரியை அழைத்துக்கொண்டு தன் தாய்தந்தை இருக்கும் ஊரையடைந்து தன் வீட்டிற்குள் போனான். போனதும் அவன் தாய்தந்தை தம்பிள்ளை வெகுநாள் வெளியே போயிருந்து வந்திருக்கிறானே என்கிற சந்தோஷமின்றி அவனைப் பார்த்துச் "சண்டாளா! துரோகி, 'குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பாயிருக்கிறாயே!' இதென்ன அநியாயம்! சுடுகாட்டில் எலும்பு மாலை பூண்டு சாம்பலைப் பூசிக்கொண்டு திரியும் முக்கண்ணனுக்கு பக்தி செய்யும் குலத்துதித்த பெண்ணை எங்கேயடா அழைத்து வந்தாய்?" என்று திட்ட ஆரம்பித்தார்கள்.

பின்பு அவ்வைஷ்ணவ பிரமசாரி தான் பிக்ஷைக்குப் போனதும் வலுவில் கௌரியைக் கலியாணஞ் செய்துகொடுத்ததும் சவிஸ்தாரமாகத் தெரியும்படி தன் பெற்றோருக்குரைத்தான். அதனைக் கேட்ட அவன் பெற்றோர் மிக்க வருத்தமடைந்து, அவ்வீட்டிலேயே ஒரு மூலையில் ஒரு அறையில் கௌரியைத் தனியேயிருக்கும்படி திட்டம் பண்ணினார்கள்.



இப்படியிருந்து வாழ்ந்துவரும் நாளில், ஒருநாள் அவ்வீட்டிலுள்ளோர் எல்லோரும் பக்கத்தூரிலுள்ள அவர் பந்து வீட்டு விவாகத்துக்குப் போக நேரிட்டது. அப்போது வீட்டிலுள்ள அறைகளையெல்லாம் பூட்டிக் கொண்டு, கௌரியைமட்டுந் தனியே வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். அவ்வீட்டில் கௌரி தனியே இருக்கும்பொழுது தான் ஒரு வேதவிற்பன்னராகிய சிவபக்தர் வீட்டிற் பிறந்து வளர்ந்தும், பின் வைஷ்ணவ பிரமசாரிக்கு வாழ்க்கைப்பட்டு, சிவபக்தரைக் கண்ணாலே பார்க்கக்கூடத் தனக்குக் கிடைக்காமற் போனதற்கும் மனம் மிக்க வருந்தித் துக்கப்பட்டுத் தனியே புலம்பிக் கொண்டிருந்தாள். அந்தப் புண்ணியவதியாகிய கௌரி தனியே புலம்புவதை அறிந்த கருணாமூர்த்தியாகிய சோம சுந்தரக் கடவுள் மனமிரங்கி, ஒரு கையில் கமண்டலமும், மற்றொரு கையில் ஒரு பழைய புத்தகமும், மேனி யெங்கும் விபூதி ருத்திராக்ஷமுமணிந்து விருத்தாப்பியப் பிராமண வேடம்பூண்டு, கை நடுங்கக் கால் நடுங்கக் கூனிக் குறுகிக்கொண்டு கௌரியிருக்கும் கிரகத்திற்கு வந்தார். விபூதி ருத்திராக்ஷமணிந்த சிவபக்தரை எப்பொழுது பார்ப்போமென்று மழையின் வரவை யெதிர்பார்த்து வாடிநிற்கும் இளம் பயிர்போல் முகம் வாடித் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்த கௌரி தன் எதிரில் வந்த, சிவபக்தராகிய விருத்தாப்பியரைக் கண்டதும் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டு பக்கத்தில் ஓடிவந்து, சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து "சுவாமி நானென்ன பணிவிடை செய்யவேண்

மெய், தெரிவித்தால் என் சக்திக்கியன்றவாறு செய்கிறேன்" என்று மிக்க வணக்கத்துடன் கேட்டாள்.

விருத்தாப்பியர் நிமிஷத்துக்கு நிமிஷம் இருமிக்கொண்டு நெஞ்சிற் கோழையடைய வார்த்தை பாதி அறியக்கூடியதும் பாதி அறியக்கூடாததுமாய் மிக்க பசியுள்ளவர்போல் தம் வயிற்றைக் கையால் பிடித்துக்கொண்டு கொஞ்சம் பசிக்கு அன்னமிடுவெனக் கெஞ்சிக் கேட்டார்.

அதனைச் செவியுற்ற கௌரி சகிக்க முடியாத் துயரங்கொண்டு, "சுவாமி! நானென்ன செய்வேன். எவ்விதம் அன்னமிடுவேன்! என்னைமட்டும தனியே இவ்வீட்டில் வைத்து வீட்டிலுள்ள அறைகளையெல்லாம் பூட்டிவிட்டல்லவோ போயிருக்கிறார்கள். 'அன்னமென்று வாய்திறந்துகேட்ட அரனடியார்க்கு அன்னமிடும் புண்ணியம் செய்யாத பாவியானேனே" என்று வாயவிட்டு அலறி வருந்தினாள். அவ்வாறு துயரங்கொண்டு புலம்பும் கௌரியைக் கிழவர் பார்த்து "பெண்ணே! நீ வருந்தாதே. உன் கையால் கதவின் பூட்டைத் தொடு; அது உடனே திறந்துகொள்ளும். பின் சமையல் செய்து எனக்குப் போஜனம் செய்விப்பாய்" என்றார். உடனே கௌரி சந்தோஷங்கொண்டு தன் கையால் அறைக் கதவின் பூட்டைத் தொட்டாள். தொட்டமாத்திரத்தில் பூட்டு தானே திறந்துகொண்டது. அதனைக் கண்டு கௌரி ஆச்சரியமடைந்து, அறைக்குட் சென்று அந்தட்சணமே தேவா



மிர்தம் போன்ற சமையல் செய்து முடித்தாள்; பின் அவ்விருத்தாப்பியருக்குக் காலலம்பி அந்த ஜலத்தைத் உன் சிரசில் புரோக்ஷணை செய்துகொண்டு, அவரை உட்காரவைத்து, இலைபோட்டுப் பசியார அன்னமிட்டாள். கௌரி மனமுவந்து உபசாரதுடனிட்ட போஜனத்தைப் புசித்ததும் அவ்விருத்தாப்பியர் விருத்தாப்பியம் நீங்கி மன்மதனெனப் பேரழகு வாய்ந்த வாலிபப் பருவத்தை யடைந்து கௌரிக்கு எதிரில் நின்றார். அந்த திவ்ய தேஜஸோடுங் கூடிய வாலிபரைக் கண்டதும் கௌரி மனம நடுங்கி வாய்பேசாமல் "இதென்ன விபரீதம், இது மாயமாயல்லவோ யிருக்கிறது" என்று பயந்து, பார்த்தோர் நகைப்பாரே என்று ஒரு மூலையிற்போய் ஒதுங்கி நின்றாள்.

அச்சமயத்தில் விவாகத்திற்குச் சென்றிருந்த அவர் வீட்டாரனைவரும் வந்துவிட்டார்கள். வந்த அவ வீட்டார் தன்னை காண்பதற்குள்ளாக வாலிப வடிவங்கொண்டிருந்த அவ்விருத்தாப்பியர் திடீரென்று இளங்குழந்தையாக மாறி அங்கிருந்த ஒரு வஸ்திரத்தில் பால் மணக்குந் திருவாயில் கால்விரலை வைத்துச் சூப்பிக்கொண்டும் அழுதுக்கொண்டும கிடந்தார். அழுதுகொண்டிருக்கும் இளங்குழந்தையைக் கண்ட கௌரியின் மாமி நம் வீட்டில் குழந்தைவரக் காரணமென்னவென்று அதிசயித்துக் கௌரியை அழைத்து "இக்குழந்தை யாருடையது, இது ஏன் இங்கு வந்தது?" என்று கேட்டாள். கேட்டவுடன் கௌரி பயந்து கார

ளஞ் சொல்லவகையின்றி "தேவதத்தனென்னும் ஓர் சிவபக்தன் மனைவி சற்றுநேரத்துக்கு முந்தி இவ்விடம் வந்தாள். வந்து இக்குழந்தையைச் சற்று பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு வெளியே போனாள்க் என்றாள். சிவபக்தன் குழந்தை யென்ற வார்த்தையை' கேட்ட மாமி அடங்காக் கோபங்கொண்டு, கௌரியை யழைத்து "நீ கொஞ்சமும் அஞ்சாமல் சிவபக்தன் குழந்தையின்பேரில் அன்புவைத்தவளாகையால், இனி இவ்வீட்டிலிருக்கத் தகாது; வெளியே நட" என்று கடுகடுத்துத் துரத்திவிட்டாள்.

கௌரி தன் தலைவிதியை நினைத்துக்கொண்டு என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாமல் அந்த க்ஷணமே அங்கு கிடந்த குழந்தையை வஸ்திரத்துட னெடுத்துக்கொண்டு தெருவில் வந்தாள். வந்து குழந்தையைப் பார்க்கையில் குழந்தையிடத் துண்டான சில குறிகளால் பரமசிவன் தான் இத்திருவிளையாடல் செய்திருக்க வேண்டுமென நினைத்துத் தன் தந்தை உபதேசித்த பராசக்தியின் திருமந்திரத்தை தியானித்தாள். தியானித்ததும் குழந்தைவடிவாயிருந்த ஆண்டவன் ஆகாசத்தில் விருஷபவாகனாரூடராகிக் கௌரிக்கு காட்சிதந்து, கௌரியைப் பார்வதி சொரூபமாகச் செய்து சகல ஜனங்களும் கண்டு அரஹரா வென்று துதிக்கத் தம்மோடு விருஷபவாகனத்தில் வைத்துக் கொண்டு அம்மதுரைமாநகரில் விளங்கும் திருக்கோயில் சென்று மறைந்தருளினார். (கஜாம்பிகை.)

## காலநிலைமை

மானிடன் ஒருவன் தனக்கரும் செல்வம்
வாய்க்கவென் றனுதின முயற்சி
தானு ஞற்றவ னேல் கடவுளு மதனைத்
தந்தளிக்குறு மதாலன்றே
ஆனபே ரறிஞர் திருவினை முயற்சி
ஆக்குமம் முயற்சி யில்லாமை
ஈனமா ரின்மை புகுத்திடு மாலென்
றியாருமுன்னுணர் தரவில்வார்.

(குசேல உபாக்யானம்)

பெரியார் முயற்சியை மேற்கொண்டால் தெய்வ சகாயமுமேற்படுமென்கின்றனர். இதனை உணர்ந்தாரும் இக்காலத்தில், நாகரிக மயக்கத்தில் இதனை மறந்து ஒருவித முயற்சியு மில்லாமலே பொருள்தேட மனங் கொண்டு திருட்டுத் தொழிலினும் ஈனமானதென்று பெரியார் அருவருக்கும்படியான சூதிலும் (குதிரைப் பந்தயத்திலும்—லாட்டரியிலும்) பொருளை அடைய அவாக்கொண்டு சதாகாலமும் இதுவே வேலையாய்த் திரிகின்றனர். "குதிரைப் பந்தயத்தில் பொருள் கூடிய சீக்கிரம் ஏராளமாய்க் கிடைக்கும், கொஞ்சம் பொறு உனக்கு நகைகள் வாங்கிப்போடுகிறேன். இப்போது உன் கழுத்து அட்டிகையைக் கொடு" என்று மனைவியிட மிருந்து நகையைப் பெற்றுச் சூதிலே ஒழிக்க உபாயத்தை மேற்கொள்ளுகின்றனர்.

தவிர, “நாளைக்கு நான் பெரியவனாய்விடப் போகிறேன். எங்கள் வீடும் பெரிதாய்விடப் போகிறது. எனக்குப் பணம் நிரம்பவந்து சேரப்போகிறது. உன்னை வைச்சேனா பாரு” என்று குழந்தைகள் தம் நண்பரோடு பேசுவதுபோல், குதிரைப்பந்தய ஆசைக்காரரும் தம் நண்பரோடு பேசி மகிழ்கின்றனர். ஆகா! இதுதான் நாகரிகம். இதுதான் கல்வியிலே அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்று கூறப்படும் இக்காலத்தின் இயல்பு. இத்தகைய குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்கிற எண்ணம் சீர்திருத்தக்காரருடைய மனசிலே உண்டாகக் காணோம். என்ன சொல்வது! கோவிலை இடிக்கவும் குளத்தைத் தூர்க்கவும் பிராமணனை மணங்கொண்ட மட்டும் திட்டவும் நாடுகிறதே இவர்கள் சித்தம். ஆகா! ஈசா! நீயாவது சிறிது கவனஞ் செலுத்தப்படாதா?

---

## காற்றிலிருந்து 3,000 பவுன் சம்பாத்தியம்

தங்கம் உருக்கும் தொழிற்சாலைகளில் இருக்கும் புகைபோக்கின் வழியாகப் புகையுடன் வெளிபோய்க்கொண்டிருந்த தங்கத் துணுக்குகளை மறுபடியும் எடுக்கக்கூடிய ஒரு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புகைபோக்கில் மேலே போகும் புகையை மேலிருக்கும் ஒரு அறையில் புகுமாறு செய்து அங்கு வைத்திருக்கும் இயந்திரத்தின் உதவியால் தங்கத்தை மறுபடியும் எடுக்கிறார்கள். இம்மாதிரி வருஷத்தில் ஒரு தொழிற்சாலையில் 3,000 பவுன் மதிப்புள்ள தங்கம் எடுக்கப்பட்டதாம்.

---

## ஸ்ரீமகாலக்ஷ்மிக்கும் பார்வதிக்கும் தர்க்கம்

(172-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று மடுவினிற் காளிங்கன் சிரசின் மீதேறி
நின்று நடித்திட்ட தென்ன நிகழ்த்துவாய் திருவே.

தாவிவந்த பெருங்கங்கை தனைத்தலையின் மீதிலெடுத்
தாவலொடு தரித்ததெனக் கறியவுரை யுமையே.

பார்புகழ வந்தருளும் பாவையே உனைத்தனது
மார்பில் வைத்ததெனக் கறிய[1] வழுத்துவாய் திருவே.

சேமக்கலந் தனைக்கொட்டித் திரிந்து வீடுகள் தோறும்
க்ஷேமமின்றி [2]இரந்ததென்ன நெறிசொல்வாய் உமையே.

தப்புக்கொட்டி நாடோறுந் தாதக்கூத் தாடிக்கொண்
டிப்புவி யெலாந் திரிந்திரந்த தென்ன திருவே.

தாருகாவன ரிஷிகள் தம்மாதர் தங்களது
சேருங்கற்பை யழித்ததென்ன நிகழ்த்துவாய் உமையே.

அரியகோப ஸ்திரீகள் பதினாயிரம் பேர்தம்
உரியகற்பை யழித்ததென்ன உன்கணவன் திருவே.

வையமதில் விளங்குபது மாகரம் காவெருவி
[3]ஜவேலிக் காயிலொளித் ததுவுமென்ன உமையே.

---

(1) சொல்லு. (2) பிச்சை யெடுத்தல். (3) ஜவேலிக்காய்-ஒருவகைக் காய், அதை உறித்தால் அதில் சிவலிங்கம் போல் விதை யிருக்கும்.

# காய்கறிகளும் பழங்களும்

காய்கறிகளும் பழங்களும் நாம் உட்கொள்ளும் உணவுகளுள் உயர்ந்த ஸ்தானத்தை உடையனவாயிருக்கின்றன. அவைகளில் ஏராளமான உப்பும், திராவகமு மிருக்கின்றன.

வெகுநாளாகக் காய்கறிகளையும், பழங்களையும் உபயோகித்துக்கொண் டிருக்கிறவர்கள் திடீரென்று அவைகளை நிறுத்தி விட்டால், அவர்கள் இரத்தம் அசுத்தமடைந்து சொரிகரப்பான், குட்டை என்ற வியாதிகளால் வருந்துவார்கள். ஈறுகளிலிருந்து இரத்தம் அதிகமாகவும் வரும். அதற்காகத்தான் நமது இந்தியர்கள் சீமைக்குப் போனல் பச்சைக்காய்கறிகளுக்குப் பதிலாக வற்றல்களையும், சாராயத்தில் கலந்த எலுமிச்சம்பழ ரசத்தையும் கொண்டுபோகிறது வழக்கம.

காய்கறிகளும் பழங்களும் நான்கு வகைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன; (1) சர்க்கரை சம்பந்தமுள்ளன (2) பசுமை நிறமுள்ளன (3) அதிகஜல சம்பந்தமுள்ளன (4) தொசேவையுள்ளன.

சாதாரணமாக உருளைக்கிழங்கு, முள்ளங்கி, ஈரவெங்காயம், சக்கரவள்ளி முதலிய கிழங்குவகைகள்தான் சர்க்கரை சம்பந்தமுள்ளன.

இவைகளும், வாழைப்பழம், தப்புவாப்பழம் முதலிய இவைகளைப் போன்ற பழங்களும் மிகவும் சிலாக்கியமான ஆகாரங்களாக உதவுகின்றன. கரும்பு, பழம், என்னும் வர்க்கங்களில் சேராவிட்டாலும், பழவகைகளோடே அதையும் சேர்த்துக் கொள்ளலாம்

கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய், கொத்தவரைக்காய் முதலிய சில பசுமைநிறமுள்ள காய்கள் தேகத்திற்கு பலத்தை உண்டாக்குகின்றன. வெண்டைக்காயில்



நிபாக்மினி அதிகமாக இருக்கிறது. ஆகையால் அதை அதிகமாக நாம் எடுத்துக்கொள்ளல் வேண்டியது.

வெள்ளரிக்காய், பூஷணிக்காய், கொம்மட்டி, பலாக்காய், பலாப்பழம், மாங்காய், மாம்பழம், கொடி முந்திரிப்பழம், முதலியன அதிக ஜலசம்பந்தமுடையன.

புளியங்காய், புளியம்பழம்; எலுமிச்சங்காய், எலுமிச்சம்பழம், மஞ்சள், பச்சைக்கொத்தமல்லி, கருவேப்பிலை, கொத்தமல்லி, மிளகு, ஓமம், மிளகாய் முதலியன தொசேவையுள்ளன.

முந்திரிப் பருப்பு, வாதம் பருப்பு, கடுக்காய் முதலியவைகளில், ஏராளமான எண்ணெயும், அதிக பலத்தைக் கொடுக்கக் கூடிய சத்தும் இருக்கின்றன.

காய்கறிகளையும், பழங்களையும். நிதானமாகச் சாப்பிட வேண்டும். பாதிபழுத்த காயையும், அதிகமாகப் பழுத்த பழங்களையும் உட்கொள்ளக் கூடாது. அஜீரணமும், வயிற்றுப் போக்கும் உண்டாகும். நீரழிவு உபத்திரவத்தால் கஷ்டப்படுகிறவர்கள் காய்கறிகளையும், பழங்களையும் தள்ளிவிடவேண்டும்.

மலச்சிக்கலில் கஷ்டப்படுகிறவர்கள் ஏராளமாகக் காய்கறிகளையும், பழங்களையும், கீரைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்: இரவில் கீரைச்சுண்டல், பழம், காய்கறி, முதலானவைகளை எடுத்துக் கொண்டால் மலச்சிக்கல் நிவர்த்தியாகும்யாதொரு மருந்தும் அவசியமில்லை.

டாக்டர் பி. வி. குப்புசாமி.

---

## 50 மைல் புத்தக வரிசை

லண்டனிலிருக்கும் பிரிட்டிஷ் மியூஸியத்தில் மொத்தம் 40½ லக்ஷம் புத்தகங்க ளிருக்கின்றனவாம் இவைகளை வைத்திருக்கும் அலமாரிகளின் மொத்த நீளம் 50 மைல் ஆகிறது. தற்காலம் இங்கு தினம் 600 முதல் 700 வாசகர்கள் போய்ப் படிக்கிறார்கள். இங்குள்ள புத்தக ஜாபிதா மாத்திரம் ஆயிரம் வால்யூமாகவுள்ளது.

## மகான்களின் மனோபாவம்

ராமதாஸரின் துணிகரமான செய்கையினால்தானே பாதுஷாவுக்குப் பகவானுடைய தரிசனம் கிடைத்தது. மனத்தில் பக்தி ஏற்பட்டுவிட்டால் அது பக்தனைத் தன்வசப்படுத்திக் கொள்கிறது. அப்பொழுது அவன் தான் பார்க்கும் எந்த ஓர் அரியவஸ்துவையும் பகவானுக்கே அர்ப்பணம் செய்வதுமல்லாமல் அந்தப் பகவானாகவே எல்லாவற்றையும் கருதுகிறான். அவனுக்கு நன்மை தீமையும் ஒன்றாய்விடுகிறது. அவன் எல்லாம் ஈச்வரனுடைய சங்கற்பம் என்று கருதுகிறான். தன்னைப்போல் பிறரையும் பகவானுடைய திருவருளுக்குப் பாத்திரமாகும்படி செய்கிறான். ஸ்ரீராமதாஸரைப் போலவே தமிழ் நாட்டில் மாணிக்கவாசக சுவாமிகளும் தம்முடைய துணிகரமான செய்கையால், பாண்டிய ராஜனுக்கு ஈசுவரதரிசனம் கிடைக்கும்படி செய்ததுமல்லாமல் ஈசுவரனுடைய மகிமையையும் விளக்கி அவனைப் பரமபக்தனாக்கினார். மகான்களுடைய செய்கை எதுவும் பரோபகாரமாகவே இருக்கும்.

---

## அரிய பழமொழிகள்

(1) தாரமும் குருவும் தலைவிதி—பெண்டுவாய்க்கும் புண்யவானுக்கு—பண்டம் வாய்க்கும் பாக்கியவானுக்கு.

(2) காலத்துக்குத் தக்ககோலம்—உத்தியோகத்துக்கு தக்க சுகம்—வாழ்வுக்குத் தக்க மஞ்சட்குளி—வரவுக்குத் தகுந்த செலவு.

(3) பிச்சையிட்டுக் கெட்டவனுமில்லை—பிள்ளைபெற்றுக் கெட்டவனுமில்லை, இவ்விதம் பிச்சை பெறுவது மோக்ஷம்

210774

## தகப்பன் மகனுக்குப் புத்திகூறல்

**இராகம்—மோகனம் தாளம்—ஆதி**

**பல்லவி.**

மார்க்கம் இது மகனே—சந்திரன்
தோற்கும் எழில் முகனே—சன்

**அநுபல்லவி.**

மூர்க்கருடனே உறவாடாதே—பழி
மூண்டிடும் அது விளையாடாதே—இந்தப்
பார்க்குள் ஒருபொய் சொல்லக்கூடாதே—மது
பானம் விரும்பி மனம் வாடாதே—சன்

**சரணம்.**

(1) நித்தியன் பொன்னடி யிணையே—துயர்க்கடலை
நீக்குதற்குதவும் புணையே
பத்திமான்கட் குண்டோ இணையே—கடவுள்நேசம்
பரகதிக்கு வழித் துணையே
சத்திய மார்க்கத்தைப் பிரியாதே—பல
தப்பு வழியை அநுசரியாதே—இந்தப்
புத்தியில்லாமல் எங்குந் திரியாதே—இந்தப்
பூவில் எவர்க்கும் இடர் புரியாதே—சன்

(2) புண்ணிய பாவங்கள் இரண்டே—நிச்சயம் அந்தப்
புண்ணிய வழியைநீ அண்டே
மண்ணினிலுமே மகிமை கொண்டே—பிழைப்பதன்
மறுமையிலும் பாக்கிய முண்டே
தண்ணியமாக என்றும் பிரகாசி—நல்ல
தந்தை தாய்பெரியர் அடிபூசி—தினம்
அண்ணன் தம்பி சோதரர்களை நேசி—நிதம்
அன்னம் எளியவர்க்கிடு வயம்பேசி—சன்

(வேதநாயகம்)

**Good conduct is the best kind of education; it is the noblest aim. There will be no danger in any place to powers of good conduct.**

*(லிங்கபுராணம்.)*

ஆபத்துவேளை அருங் கிளைஞர் பண்புணர்க
நீபயத்தில் கையாள் நிலையறிக—தாபஞ்சேர்
இன்மையுறு போழ்தில் இல்லாள் குணங்காண்க
தன்மையோடு வேமனனே தான்.

கண்ணுதலா லயநோக்கும் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகும் கால்களே கால்கள்
பெண்ணொரு பாகனைப் பணியும் தலைகளே தலைகள்
பிஞ்சகனைப் பூசிக்கும் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடும் நன்றுவே நன்று
பரன்சரிதையே கேட்கப்படும் செவியே செவிகள்
அண்ணல் பொலங்கழல் நினைக்கும் நெஞ்சமே [நெஞ்சம்
அரனடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை.

*கண்ணுதல்-நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான்.*

*கறைக்கண்டன்-கழுத்திலே கறுப்பு (விஷம்) உடையவன்.*

*பெண்ணொரு பாகன்-உமாதேவியை இடப்பாகத்திலுடைய பரமசிவன்.*

*பிஞ்ஞகன்-சிவபெருமான்.*